பக்கங்கள் 6 விலை சதம் 40

விற்பனைக்கு
சகல ஆயுதங்கள்
கொம்பிறேசர் மற்றும்
ரியூப் ஒட்டும் உபகரணங்
கள் கடையில் விற்பனைக்கு
சகல விபரங்களுக்கும்
சிறி ராஜன்ஸ்,
உரும்பராய் சந்தி,
உரும்பராய்.
7613

# ஈழநாடு
# The EELANADU

'நீம் சுகாதார தூபம்'
வேம்பினின்றும் நவீன முறையில்
தயாரிக்கப்பட்ட
'நீம் சுகாதார தூபம்'
வீட்டிலுள்ள நுளம்பு, பூச்சி, புழு
ஆகியவற்றை அற்புதமாக அகற்றி
நறுமணம் கமளச் செய்கின்றது.
வாங்கி உபயோகியுங்கள்
ஓர் மில்க்வைற் தயாரிப்பு.

மலர்: 19 ஐப்பசி 23 ஜுல்ஹஜ்: 25 இதழ் 269
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 8-11-77

## வருமானம் 681 கோடி; செலவினம் 1043 கோடி

# ரூ. 362 கோடி துண்டுவிழுகிறது

## பட்ஜட் 15-ம் திகதி

(கொழும்பு).

**தேசிய அரசுப்பேரவை நேற்றுப் பிற்பகல் கூடியபோது, 1978ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் பூர்வாங்க மதிப்பீடுகளை நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் சமர்ப்பித்தார். உத்தேச மதிப்பீட்டின்படி புதிய வரவு செலவுத்திட்டத்தில் 362கோடியே 51லட்சத்து 95 ஆயிரத்து 216 ரூபா துண்டு விழுகிறது.**

துண்டுவிழும் இப்பெரிய தொகையை எப்படிச் சமாளிக்கலாம் என்ற விபரங்களை நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் அடுத்தவாரம் வெளியிடுவார். ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்டம் (பட்ஜட்) இம்மாதம் 15ம் திகதி தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்கப்படும். அப்பொழுது துண்டுவிழும் தொகையைச் சமாளிக்கும் பல்வேறு யோசனைகளையும் நிதி அமைச்சர் தெரிவிப்பார்.

### ஒரே பார்வையில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செலவினம்: | 1043 கோடி | 86 | லட்சத்து | 19,216 | ரூபா |
| வருமானம்: | 681 ,, | 34 | ,, | 24,000 | ,, |
| துண்டு விழும் தொகை: | 362 ,, | 51 | ,, | 95,216 | ,, |

பல்வேறு அமைச்சுகளுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி விபரம் வருமாறு:

| | |
|---|---|
| பாதுகாப்பு, திட்டமிடல் அமைச்சு | ரூ. 38,02,57,000 |
| கல்வி அமைச்சு | ரூ. 103,74,77,410 |
| பொதுநிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | ரூ. 54,27,94,150 |
| உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு | ரூ. 44,43,62,092 |
| கைத்தொழில், விஞ்ஞான அமைச்சு | ரூ. 62,04,88,865 |
| நிதி அமைச்சு | ரூ 271,49,28,894 |
| போக்குவரத்து அமைச்சு | ரூ. 56,51,25,310 |
| விவசாயம், காணி அமைச்சு | ரூ. 56,04,30,175 |
| கடற்றொழில் அமைச்சு | ரூ. 12,77,94,915 |
| தபால், தந்தி அமைச்சு | ரூ. 24,30,39,133 |
| சுகாதார அமைச்சு | ரூ. 52,82,98,409 |
| உணவு, கூட்டுறவு அமைச்சு | ரூ. 120,55 66,620 |
| நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு | ரூ. 85,40,00,000 |

### சில புள்ளி விபரங்கள்

புதிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி; நீர்ப்பாசன, மின்சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு கடந்த ஆண்டிலும் பார்க்க 23 கோடியே 40 லட்சம் ரூபா இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது. இதே போல நிதிஅமைச்சுக்கு 62 கோடியே 50 லட்சம்ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 10கோடியே 20 லட்சம் ரூபாவும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

திட்டமிடல், கடற்றொழில், வர்த்தகம், மற்றும் கப்பல் விமான போக்குவரத்து உல்லாசத்துறை அமைச்சுகளுக்கு இம்முறை குறைவாகவே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசுப்பேரவை மீண்டும் இம்மாதம் 11ம் திகதி கூடும். (ம)

## கலைஞர் கைதானசெய்தி கேட்டு——

சென்னை, நவ. 7

கலைஞர் கருணாநிதி கைது செய்யப்பட்டசெய்திகேட்டு அதிர்ச்சி அடைந்து தற்கொலைசெய்ய முயன்ற ஒருவர், தமது முயற்சி தோல்வி அடையவே, மற்றுமொரு பயங்கர முயற்சியை மேற்கொண்டு அதுவும் தோல்வி கண்டநிலையில், தற்போது படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

திருமதி இந்திரா காந்தியின் தமிழ்நாடு விஜயத்தை யொட்டி சதித்திட்டம் ஒன்றின்பேரில் தி. மு. கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி கைதுசெய்யப்பட்டதும், அவரை விடுதலை செய்யக்கோரி, தி. மு. க. தொண்டர் திரு. எம். குருசாமி, சென்னைச் சிறைச்சாலையின் முன் தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றி நெருப்புவைக்க முயன்று தற்செயலாக தப்பிவிட்டார்!

முயற்சி வெற்றியளிக்காததால், மண்ணெண்ணெய் கொண்டுவந்த போத்தலை உடைத்து, தன்உடம்பெல்லாம்குத்திக்கீறி, இரத்தம் பீறிட்டநிலையில் அவர் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கருணாநிதி கைது செய்யப்பட்டதுகுறித்து தி. மு. கழக கொடியுடன் 'கருணாநிதியை விடுதலை செய்!' தலைவர்களை நிபந்தனையற்று விடுதலைசெய்' என்று ஆவேசமாக சத்திக்கொண்டு தனது கையிலிருந்த மண்ணெண்ணையை உடல்மீது ஊற்றி தீவைக்க முயன்றார். தீப்பெட்டி மண்ணெண்ணையில் ஊறியிருந்ததால் பற்றவில்லை. இம்முயற்சி தோல்வியடையவே கையிலிருந்த போத்தலை உடைத்து போத்தல் துண்டினால் தனதுமேல் எல்லாம் கீறினார். இரத்தம் பீறிட்டநிலையில் காவல் துறையினரால் இவர் கைது செய்யப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து சிறைச்சாலைக்குச் சென்ற உறவினர்கள் தலைவர் கருணாநிதிக்கு விஷயத்தைக் கூறியபோது தொண்டர்கள் கட்டுப்பாட்டுடன் உணர்ச்சி வசப்படாமல் இருக்கவேண்டுமென்று கலைஞர் கேட்டுக்கொண்டார். (செ)

## மின்சார தடை

(யாழ்ப்பாணம்)

முத்திரைச் சந்தியில் உள்ள உபமின்மானி பழுதடைந்த காரணத்தினால் நேற்றுக் காலை முதல் நல்லூர் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டுள்ளது. இந்த மின்சாரத் தடை இன்று பிற்பகல்வரை நீடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (செ)

## சங்கிலித தோப்பில் தொல்பொருள் ஆராய்ச்சி

யாழ்ப்பாணம், செவ்

சங்கிலித்தோப்பு இருக்கும்பகுதியைதொல்பொருள் திணைக்களக்குழுவொன்று பார்வையிட்டது. சங்கிலித் தோப்பைப் பாதுகாக்கும் அதேவேளையில் அப்பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சிகளை நடத்தவும், அதற்கான பகுதியை விஸ்தரிக்கவும் இக்குழு தீர்மானித்திருக்கின்றது.

இக்குழுவில், கலாச்சார அமைச்சின் செயலாளர் திரு. ஆர். இரத்தினயக்கா, தொல்பொருள் துறை ஆணையாளர் டாக்டர் ஆர். எச். டி. சில்வா, உதவிஆணையாளர் (கட்டடப் பிரிவு) திரு. ரோலண்ட்சில்வா உதவி ஆணையாளர் (கண்டு பிடித்தல் வெளியீட்டுப்பிரிவு) திரு. எச். சிறிசோம ஆகியோர் வந்திருந்தனர்.

இக் குழுவினரை தொல்பொருள்துறை யாழ். பிரதேச அதிபர் திரு. மா. பொ. செல்வரத்தினம், சங்கிலித் தோப்புக்கும் மற்றும் இடங்களுக்கும் அழைத்துச்சென்றார்.

இக்குழுவினர் சங்கிலித் தோப்பு, தம்புத்துறை, கந்தரோடை, அல்லைப்பிட்டி ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தனர்.

பொதுமக்களின் ஒத்துழைப்பையும், பெருந்தொகையான காணி உரிமையாளரின் ஆதரவையும் பெறும் நோக்கமாக தொடர்ந்து நடவடிக்கைஎடுக்கப்படுமென்று இக் குழுவினர் தெரிவித்தனர்.

பண்டைய தமிழ் மன்னர்களின் அரண்மனை, நீராடும் பழைய ஊற்றுநீர்கேணியான ஜமுனா ஏரியையும் இக்குழுவினர் பார்வையிட்டனர். ஜமுனா ஏரி, இன்னும் போதிய முறையில் பாதுகாக்கப்பட்டு, பொதுமக்கள் சென்றுபார்வையிடும் வகையில் அமைக்கப்படுமென்றும் குழுவினர் தெரிவித்தனர்.

சங்கிலித்தோப்பு பகுதியில் உள்ள சில காணிகள் யாழ்ப்பாணம் சிவன்கோவிலுக்குச் சொந்தமாக இருப்பதனால் இவற்றை சீரியமுறையில்பாதுகாக்க, கோவில் முகாமையாளருடன் தொடர்பு கொண்டு இக் குழுவினர் நடவடிக்கை எடுக்கவிருக்கின்றார்கள்.

இக்கோவில் காணிகளில்குடியிருப்பவர்களை சங்கிலித் தோப்பை பாதுகாக்கும் பொருட்டு வேறு பொருத்தமான கோயில் காணிகளில் குடியேறுவதற்கும் ஏற்பாடு செய்யப்படவிருக்கிறது.

யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி தொல்பொருள் குழு மாணவர், சங்கிலித்தோப்பை

(6-ம் பக்கம் பார்க்க)

## ஒருநாள் சிசு மரணம் பணிப்பெண்மீது விசாரணை

யாழ்ப்பாணம், செவ்

நல்லூரிலுள்ள வீடொன்றின் மலக்கூடத்தில் ஒருநாள் சிசுவின் சடலமொன்று கண்டு பிடிக்கப்பட்டது.

இச்சிசுவின் மரணம்தொடர்பாக, அவ்வீட்டின் பணிப்பெண் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

10 வருடங்களாக அவ்வீட்டில் பணிப்பெண்ணாக இருந்து வருவதாக விசாரணையில் தெரியவந்தது.

மரணவிசாரணை நடத்திய யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம், பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு, விசாரணையை ஒத்தி வைத்தார். (க-அ)

# யாழ். இந்து, சுண்டிக்குளி மகளிர் கல்லூரிகள் சாதனை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணத்திலிருந்து கலந்து கொண்ட கல்லூரிகளில் யாழ். இந்துக் கல்லூரி மாணவரும், யாழ். சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவியும் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இவ் விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆறு கல்லூரிகள் கலந்துகொண்டன.

யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ச. தயாளன் ஈட்டி எறிதல் போட்டியில் 150 அடி 9 அங்குலம் எறிந்து புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார்.

யாழ். இந்துக் கல்லூரியின் தற்போதைய உடற்பயிற்சி ஆசிரியர் திரு. தி. சிறிவிசாகராஜா இக்கல்லூரி மாணவராயிருந்து 1956 ம் ஆண்டு நிலைநாட்டிய சாதனையை 21 வருடங்களின்பின் தயாளன் முறியடித்துப் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான மேற்படி போட்டியில் கலந்துகொண்ட யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவியான செல்வி. செல்வ கௌரி 110 யார் தடையோட்டப் போட்டியில் பங்குபற்றிப் புதிய சாதனையை நிலைநாட்டினார். சாதனைகளை நிலை நாட்டியவர்கள் தமக்கான விருதுகளையும் பெற்றுக்கொண்டனர். (கா-அ)

## வரிவிளம்பரம்

### தேவை

அனுபவமும், திறமையும் வாய்ந்த மனேஜர், உதவி மனேஜர், ஒப்பரேட்டர் ஆகியோர் ஜெஸ்ஸி சினிமா முல்லைத்தீவுக்குத் தேவை. முழு விபரங்களுக்கு 12-11-77க்கு முன்னர் படமாளிகை உரிமையாளர் சி. சிவநேசன் அவர்களுடன் நேரில்தொடர்பு கொள்ளவும். 7593

1973-ம் ஆண்டு
44-ம் இலக்க
நீதிநிருவாகச் சட்டம்
283 ம் பிரிவின் கீழ்

## இடைக்காலக் கட்டளை

### இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

சுன்னுகம் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னத்துரையின். மரணசாதனம் எழுதப்படாத சொத்து சம்பந்தப்பட்ட வழக்கில்
காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்
இலக்கம்: 383

சுன்னுகம் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி அரியகுட்டி
விண்ணப்பகாரர்

மற்றும்

1. சரவணை நன்னித்தம்பி, சுன்னுகம் வடக்கு, சுன்னுகம்.
2. நாகலிங்கம், பரமேஸ்வரன், புகையிரதநிலையம், சுன்னுகம்.
3. நடராசா பெண் அம்பிகை, சுன்னுகம் வடக்கு, சுன்னுகம்.
4. இளையதம்பி திருநாவுக்கரசு, மலபை, சுன்னுகம்.
5. இளையதம்பி சிவலோகநாதன், மலபை, சுன்னுகம்.
6. இளையதம்பி விக்னேஸ்வரன், மலபை, சுன்னுகம்.
7. எம். இராயதுரை பெண் கனகாம்பிகை, மலபை, சுன்னுகம்.
8. கனகசபை கதிரவேலு பெண் சாவித்திரி, மலபை, சுன்னுகம்.

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 6-07-1977 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டதென திருப்தியடைந்ததன்பேரில்4-11-1977 திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினுலன்றி மேற் சொல்லப்பட்ட விண்ணப்பகாரர் மேற்சொல்லப்பட்டவரின் நெருங்கிய உறவினர் என்ற முறையில் அவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துகளுக்குரிய தத்துவப்பத்திரம் பெறுவதற்கு உரிமை உடையவர் எனவும் யாழ்ப்பாண நீதிநிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
திகதி 6-7-77

திகதி 4-11-77.

காரணம் காட்டும் திகதி 7-12-1977 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை.
7611

## கி.மு.சங்கம் புனரைப்பு

(திருகோணமலை)

திருமலைப்பகுதியில் கிராம முன்னேற்றச் சங்கங்கள் யாவும்புனரமைப்பு செய்யப்பட இருக்கின்றன இதன் பிரகாரம் கிராமம் ஒன்றுக்கு ஒரு கிராம முன்னேற்றச் சங்க வீதத்தில் அமைக்கப்பட இருக்கின்றன.

இத்தகவலை திருகோணமலைக்கு உத்தியோக பூர்வமாக விஜயம் செய்த பொதுத்துறைப்பணி அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரம தெரிவித்தார். (க)

## கேள்வி விளம்பரம்

1977-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ம் திகதி (24-11-1977)வியாழக்கிழமை காலை 10-30 மணிவரை வட்டுக்கோட்டைப்பிரதேசவிசேட ஆணையாளரால் கொந்தராத்துக்காரரிடமிருந்து கீழ்க்குறிக்கப்படும் வேலைகளுக்குசீல்வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 23-11-1977ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரையும்ஒவ்வொரு வேலைக்கும் ரெண்டர்ப் பணமாக தலா ரூபா 25/-ம்,ஒவ்வொரு வேலைக்குரிய ரெண்டர்ப்பத்திரப் பணமாக ரூபா 12/ ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய விபரங்கள் யாவும் எனது கந்தோரில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

**வேலைகளின் பெயர்**

1. தாவளை வீதி.
2. கொத்துத்துறைச் சுடலை வீதி.
3. சிவன் கோவிலடி புதிய வீதி.

சோ. அருணுசலம்
விசேட ஆணையாளர்,
வட்டுக்கோட்டைக்
கிராமசபைப்பிரதேசம்.
4-11-1977. 7596

## 'வழமையான பஸ்சேவை வேண்டும்'

(சுழிபுரம்)

பொன்னுலையில் இருந்து சுழிபுரம், சித்தன்கேணி, வட்டுக் கோட்டை, கல்லுண்டாய் வீதி ஊடாக யாழ்ப்பாணம் வரை சேவையில் ஈடுபட்டிருந்த 785-ம் இலக்க பஸ் சேவையை மீண்டும் அதே பாதையில் சேவையாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடன்செய்யுமாறு சுழிபுரம் கிராமசபைப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கம் வட பகுதி இ. போ. ச. மேலதிகாரிகளைக்கேட்டுள்ளது.

நீண்டகாலமாக இயங்கி வந்த இச்சேவையை மூளாய் ரூட், சங்கரத்தை, நவாலி பாதையில் மாற்றியதை அடுத்து பொன்னுலை, சுழிபுரம் ஆகிய இடங்களிலிருந்து வட்டுக்கோட்டை யாழ்.வளாகத்திற்குச் செல்லும் மாணவர்களும் வட்டுக்கோட்டை, அராலி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளும் பெரிதும் சிரமப்படுகிருர்கள் என்றும் மேலதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பில் இருக்கும் வட்டுக்கோட்டைத் தொகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. தா. திருநாவுக்கரசுவிடம் தொலைபேசி மூலம் கேட்கப்பட்டுள்ளது. (இ)

## பெற்ருேர் ஆசிரியர் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்குப் புதியதொரு ஆய்வு கூடத்துக்குரிய கட்டிடவேலைகளை பங்குனி மாதத்திற்கு முன்பு ஆரம்பிக்கவேண்டுமெனவும் இடவசதி, மின்சார வசதி என்பன பற்றி கல்வி அதிபரிடம் முறையிட்டு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமெனவும், மேற்படி கல்லூரியின் பெற்ருேர் ஆசிரியர் சங்கக்கல்லூரியின் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கூட்டம் கல்லூரியின் அதிபர் திரு. சு. கனகராசா தலைமையில் நடைபெற்றது.

நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்- திரு சு. கனகராசா, உபதலைவர்கள்: திரு. ந. க. செல்லத்துரை, திரு. மு. கணேசன், திரு. சி. கனகசபை, திரு. மு. வேலும்மயிலும், செயலாளர்: திரு. க. ச. சோமசுந்தரம், உபசெயலாளர்: திரு. வை. தியாகராசா, பொருளாளர்: திரு. ஐ. ஜெகநாதன், கணக்குப்பரிசோதகர்: திரு. வி. எஸ். கணபதிப்பிள்ளை, திரு. வி. சிவசுப்பிரமணியம், திரு. பொ. ஜெகநாதன். (செ-இ)

## மருந்து தட்டுப்பாடு

(சங்கானை)

சங்கானை அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துத்தட்டுப்பாடு சம்பந்தமாக தாம் அடையும் கஷ்டம்பற்றி பொதுமக்கள் சங்கானைப் பட்டின சபைக்கு செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பட்டினசபை விசேடஆணையாளர் திரு எஸ். தணிகாசலம் வடபகுதி சுகாதார அத்தியட்சகரிடம் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கி மக்களின் குறையை தீர்த்து வைக்கும்படி அவசரச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார். [ச]


### அறிவித்தல்

யாழ்ப்பாணம்ஸ்ரீவேங்கடேசவரதராஜப்பெருமாள் தேவஸ்தானத்தில்12-11-77ல்நடைபெறவிருந்த அதிர்ஷ்ட இலாபச்சீட்டிழுப்புகாலநிலையைமுன்னிட்டும் அடிக்கட்டைகள்வந்து சேராதகாரணத்தாலும் 14-1-78க்கு மாற்றம் செய்யப்பட்டிருப்பதை திருப்பணி அன்பர்களுக்குமாத்திரம் அறியத்தருகின்ருேம்.

திருப்பணிச்சபை
7610


## மாவையில் பாவளி நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்றத்தின் "கலைஞர்கள் சந்திப்பும் கருத்துப்பரிவர்த்தனையும்" தீபாவளித்தினமான இம்மாதம் 10-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுகிறது.

மாவை ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. து. ஷண்முகநாதக்குருக்களின் தலைமையில் அவரது இல்ல அரங்கில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் நாதஸ்வரக் கலை பற்றி நாதஸ்வர வித்துவான் திரு. சோ. உருத்திராபதியும் நாடகக்கலை பற்றி கலாஜோதி செ. சண்முகநாதனும் (சாஞ) உரையாற்றுவர். கலைப்பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை அறிமுகவுரை நிகழ்த்துவார். தீபாவளித் தேநீர் விருந்தும் இடம்பெறும். (அ)

## பாரந்தூக்கியிலிருந்து உதிரிப்பாகங்கள் களவு!

(மாவிட்டபுரம்)

மயிலிட்டி மீன்பிடித்துறைமுகத்திற்கான பாரிய கற்களைக் கிளறி ஏற்றி இறக்குவதற்காகப் பலாலியில் தங்கிநின்ற பாரந்தூக்கி ஒன்றிலிருந்து உதிரிப்பாகங்கள் பல களவாடப்பட்டுள்ளன.

மயிலிட்டி மீன்பிடித்துறைமுக அமைப்பு வேலைகளுக்குத் தேவைப்படும் பாரிய கற்களைத் தோண்டி வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்காக பலாலியிலுள்ள காணியொன்றில் தங்கிநின்ற இப்பாரந்தூக்கியிலிருந்து 1000 ரூபா பெறுமதியான உதிரிப்பாகங்கள் திருடப்பட்டுள்ளதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் இத்திருட்டுக் குறித்து விசாரணை செய்துவருகின்றனர். (அ)

## முகாமையாளர் தாக்கப்பட்டாராம்

வவுனியா, திங்கள்

வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூன்று முறிப்புக் கிளையின் முகாமையாளர் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ்ப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தொழிற் சங்கத்தினர் திடீரென ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

இதுபற்றி அரசாங்க அதிபருக்கும், பொலிஸ் அத்தியட்சகருக்கும், கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் அறிவித்திருப்பதாக தொழிற் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி தகுந்த நடவடிக்கை மேலிடம் எடுக்காவிட்டால் தொடர்ந்தும் தொழிற் சங்கம் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் அவர் கூறினர். (உ)

## தரம் உயர்வு

(திருகோணமலை)

திருகோணமலை புனிதசவேரியார் கல்லூரி இம்மாதம் முதல் இரண்டாம் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இக்கல்லூரி இனிமேல் மகா வித்தியாலயம். என என அழைக்கப்படும்,

## விவசாயிகள் கவலை

(வவுனியா)

வவுனியாவில் பெய்த மழையினுல் ஏற்கனவே விதைக்கப்பட்ட வயல்கள் அழிந்தபோதிலும், அடுத்தபோகம் விதைக்க கூடிய அளவிற்கு குளங்கள் ஒன்றும் நிரம்பவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளார்கள். (க)


# விசேட மலிவு விற்பனை

பண்டத்தரிப்பு நவீன சந்தையில் அமைந்திருக்கும்
விசேட விற்பனை நிலையத்தில்

- சிறுவர் உடைகள்
- சேட்டுகள்
- காற்சட்டைகள்
- சிந்தற்றிக் புடவைகள்

பொதுமுகாமையாளர்,
பண்டத்தரிப்புப் பரிஷ் ப. நோ. கூ. சங்கம்
7612

# இன அடக்குமுறை நீடித்தால் பல தடைகள் விதிக்கப்படும்

## தென் ஆபிரிக்காவுக்கு யு. எஸ். எச்சரிக்கை

வாஷிங்டன், நவ. 7

தென் ஆபிரிக்க வெள்ளையர் சிறுபான்மை அரசு தொடர்ந்தும் இன அடக்கு முறைக் கொள்கையைக் கடைப்பிடிக்குமானல் ஆயுதத்தடை மட்டுமன்றி வேறு பல தடைகளையும் அமெரிக்கா விதிக்கும்.

இவ்வாறு உப ஜனாதிபதி திரு. மொண்டேல் தெரிவித்துள்ளார்.

தென் ஆபிரிக்கா மீது வர்த்தகத் தடைவிதிக்கப்படவேண்டும் என்று ஐ நா. வில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை அமெரிக்கா தனது சொந்த நலன் கருதியே வீட்டோ செய்தது என்று உலகில் பரவலாக எழுந்துள்ள கூற்றுக்கும் திரு மொண்டேல் மறுப்புத் தெரிவித்தார்.

### தென் ஆபிரிக்காவுக்கு போர் விமானங்கள்

இதேவேளையில் தென் ஆபிரிக்காவுக்கு 32 ஜெட் போர் விமானங்களையும், 12 துப்பாக்கிப் படகுகளையும் வழங்கும் என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் மோஷேதயான் தெரிவித்துள்ளார்.

தென்ஆபிரிக்காவுடன் இஸ்ரேல் இதுகாலவரை நல்ல நட்புறவுடனேயே இருக்கிறது என்றும் எதிர்காலத்தில் அந்நாட்டுடனான உறவை மேலும் பலப்படுத்திக்கொள்ளும் என்றும் ஜெனரல் தயான் கூறினார். (இ)

# ஜே. பி.யின் அறிவுரையை இந்திரா மீறினராம்

பட்னு, நவ. 7

முன்னாள் இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியை தீவிர அரசியலிலிருந்து ஒதுங்குமாறு அண்மையில் தாம் அறிவுரைகூறியதாகவும் ஆனால் திருமதி காந்தி தமது அறிவுரையை மீறி தொடர்ந்து அரசியலில் ஈடுபட்டு வருகிறார் என்றும் இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்துள்ளார்.

திருமதிகாந்தி அண்மையில் பட்னுவந்து தம்மைச் சந்தித்தபோதே தாம் அவருக்கு அறிவுரை கூறியதாகவும் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார். (இ)

# சமயப்பணிக்கு கார் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடி இலங்கை சைவ அநாதை இல்லத்தின் நற்பொறுப்பாளரும், சைவக்குருத்திணிகள் இல்லப் பாதுகாவலரும் கைதடி இந்துவாலிபர் சங்கத்தின் தலைவருமான திரு. ஆ. கந்தையா சைவசமயத்துக்கும், சமூகத்திற்கும் ஆற்றிவரும் தொண்டுகளைப் பாராட்டியும் வாழ்த்தியும் அவரது பணிகள் நிறைவடையும் பொருட்டு சண்டிலிப்பாய் சைவப்பெரியார் ஒருவர் முப்பதினாயிரம் பெறுமதியான காரை அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளார்.

இக்கார் கிடைத்ததும் இல்லத் தேவைகளுக்கும் சமயப் பணிகளுக்கும் பாவிக்க இருப்பதாகவும் அண்மையில் ஆரம்பிக்கப் பெற்ற சைவக்குருத்திணிகள் இல்லத்தின் வளர்ச்சிக்கு இது ஒரு பெரும் நிறைவைத் தருவதாக இருப்பதாகவும் திரு. ஆ. கந்தையா நமது நிருபரிடம் தெரிவித்தார். (அ)

## ஆசிரியர்கள் இடமாற்றம்

(வவனியா)

வவனியாவில் உள்ள ஆசிரியர்கள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். அரசியல் காரணங்களுக்காகவே, இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

வவனியா மகாவித்தியாலயத்திலுள்ள ஆசிரியர் ஒருவர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும், நம்பைச்குளம் மகளிர் கல்லூரி ஆசிரியை கேகாலை மாவட்டத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சிலிருந்து பிராந்திய பிரதம கல்வியதிகாரிக்கு இடமாற்ற உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது. (க)

## தொழிற் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

(பண்டத்தரிப்பு)

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் காரியாலய உதவியாளர்கள் புதியதொழிற் சங்கம் ஒன்றை அமைக்க உள்ளனர்.

இத்தொழிற் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் இம்மாதம் 12-ந் திகதி சனிக்கிழமை உடுவில் கிராமசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ)

## அணைக்கட்டு உடைந்து 40 பேர் பலி!

ஜோர்ஜியா, நவ. 7

அமெரிக்காவின் தென்மாநிலமான ஜோர்ஜியாவில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததை அடுத்து 40 பேர் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் 60க்கும் அகதிமானோர் காயமடைந்தனர். (இ)

### நடிகை லட்சுமிக்கு

# வெள்ளித்தாமரையும் ரூ. 10 ஆயிரமும் பரிசு

## கலைஞர்களுக்கு ஜனாதிபதி விருது

புதுடில்லி, நவ 7

இந்தியாவின் சிறந்த நடிகையாகத் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் நடிகை திருமதி லட்சுமி இந்திய ஜனாதிபதி திரு. நீலன் சஞ்சீவரெட்டியினால் நேற்று புதுடில்லியில் பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. ஜெயகாந்தனின் கதையான 'சில நேரங்களில் சில மனிதர்கள்' என்ற திரைப் படத்தில் சிறப்பாக நடித்தமைக்காகவே திருமதி லட்சுமி 1976 ம் ஆண்டின் சிறந்த நடிகையாகத் தெரிவு செய்யப்பட்டார்.

திருமதி லட்சுமிக்கு வெள்ளித்தாமரையும் 10 ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்பட்டது.

சிறந்தபின்னணிப் பாடகரான திரு. ஜேசுதாஸுக்கும் (சித்தூர்) சிறந்த பின்னணிப் பாடகியான திருமதி பி. சுசீலாவுக்கும் (சிறிசிறிமுவா) ஜனாதிபதி வெள்ளித்தாமரைகளைப் பரிசாக வழங்கினர்.

பரிசுபெற்ற படங்களைத் திரையிட இருக்கும் 24-வது தேசிய திரைப்படவிழாவையும் திரு. சஞ்சீவரெட்டி நேற்று ஆரம்பித்துவைத்தார். (இ)

# பூட்டோ சார்பில் பிரிட்டிஷ் வழக்கறிஞர்

## கொலைவழக்கில் ஆஜராவார்

லண்டன், நவ. 7

கொலைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளமுன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலிபூட்டோ சார்பில் பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞர் ஒருவர் ஆஜராக உள்ளார்.

பிரபல பிரிட்டிஷ் வழக்கறிஞரான திரு. சார்ல்ஸ் மத்யூ. என்பவரே இவ்வழக்கில் ஆஜராவார்.

பிரிட்டனில் உள்ள பாகிஸ்தான் பிரஜைகள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். (இ)

# 1978 இன ஒதுக்கல் ஆண்டாக அனுஷ்டிக்கப்படும்

## ஐ. நா. விசேஷ கமிட்டிமுடிவு

நியூயோர்க், நவ. 7

1978-ம் ஆண்டை இன ஒதுக்கல்-எதிர்ப்பு ஆண்டாக அனுஷ்டிப்பதென 'இன ஒதுக்கல் தொடர்பான ஐ. நா. விசேஷ கமிட்டி முடிவுசெய்துள்ளது.

ஐ. நா. பொதுச்சபைக்கு இக்கமிட்டி சமர்ப்பித்த அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இன ஒதுக்கலை இல்லாதொழிக்கவும் இன, நிற பேதமின்றி அனைத்து மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையைவழங்குகின்ற கோட்பாட்டின் அடிப்படையில் ஒரு புதிய சமுதாயத்தை நிர்மாணிக்கவும் போராடுகின்ற தென் ஆபிரிக்க மக்களது போராட்டத்துடனான உலக வியாபகமான ஒருமைப்பாட்டினை உணர்த்தும் பொருட்டே சர்வதேச இன ஒதுக்கல்-எதிர்ப்புஆண்டு அனுஷ்டிக்கப்படவுள்ளது' என மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# வேலையற்றோர் பிரச்னையை தீர்க்கும் வழி இதுவல்ல

## வி. பி. கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

"ஒரு கூட்டத்தினரை வேலை இழக்கச் செய்து இன்னொரு சாராருக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் செயல் எம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதே அன்றி வேலையற்றோர் பிரச்னைக்குத் தீர்வுகாணும் வழியாக அமையாது. எனவே நாடு பூராவும் உள்ள பாலர் பாடசாலை ஆசிரியைகள் ஒருங்கிணைந்து வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான போராட்டத்தில் பங்கு கொள்வதற்குத் தயாராகவேண்டும்."

இவ்வாறு வட இலங்கைத் தமிழ் பாலர் பாடசாலை ஆசிரியைகள் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு. வி. பொன்னம்பலம் கூறினார்.

யாழ்-மானிப்பாய் வீதியில் உள்ள சிறுவர் பாடசாலை மண்டபத்தில் செல்வி அ. இராஜேஸ்வரி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பொன்னம்பலம் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"உலகிலுள்ள முற்போக்கு நாடுகளில் ஏழு வயதுச் சிறுவர்களே பாடசாலைக்கு அனுமதிக்கப்படுகின்றனர் என்பது உண்மையாயினும் அங்கு பாலர் கல்வி தொழிற் சங்கங்களாலும் சமூக ஸ்தாபனங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன. விஞ்ஞான பாடத் திட்டங்களில் சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியைகளையும் அரசே பயிற்றுவித்து நடைமுறைப்படுத்திவருகின்றது.

"பாலர் பாடசாலைகளில் உள்ள பிள்ளைகளை அரசு பொறுப்பேற்கும் அதேவேளையில் ஆசிரியைகளையும் ஏற்பது நியாயமே. வடபகுதியைப் பொறுத்தவரை பாலர் பாடசாலை ஆசிரியைகள் அடிப்படைக் கல்வித் தகைமையும், பாலர் பாடசாலை சிறப்புப் பயிற்சியும் பெற்றவர்கள். இவர்கள் பாலர் பாடசாலைகளை நடாத்தும் தகுதியுள்ளதால் இவர்களுக்கு முன்னுரிமையாக ஆசிரிய நியமனம் வழங்கவேண்டும்.

"அரசு தனியார் துறையை ஊக்குவிப்பதாகச் சங்கக் கடைகளிலுள்ள கூப்பன்களை மாற்றி அவர்களிடம் ஒப்படைக்கின்றது. பாலர் பாடசாலைகளை நடாத்திவரும் ஆசிரியைகளை வேலையற்றோர் ஆக்கிவிட்டு புதிய ஆசிரியர்களுக்கு நியமனம் தருவதன்மூலம் வேலையற்றோருக்கு அரசு வேலைவாய்ப்பளிக்கிறது என்று கூறுவதில் நியாயமில்லை"

பொதுக்கூட்டத்தில் கடந்த மூன்று வருடங்களாக வழங்கப்படாமல் இருந்த பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. திருமதி வேதவல்லி கந்தையா, திரு. த கந்தசாமி உட்பட பலர் உரையாற்றினர். (கெ-இ)

## சாரணர் மரம்நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சாரணர் சங்கமும், சாரணராளர் சங்கமும் நடாத்தும் மரம் நாட்டு விழாயாழ். இந்துக்கல்லூரியில் எதிர் வரும் 12 ம் திகதி சனிக்கிழமை பி. ப. 2-30 மணிக்கு திரு. ஜே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெறும் தாலகாவலர் க கனகராசா மரக்கன்றை நாட்டுவார்.

வட.மாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. க. சிவநாதன், பிரிவு வனபரிபாலன அதிகாரி திரு. ஏ. நாகரத்தினம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசாமி, 'மில்க் வைற்' ஆசிரியர் திரு க. கி. குலரத்தினம் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் திரு சி. சுந்தமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றுவர். (அ)

### வவனியாவில்

# வயல்களில் மீண்டும் விதைக்கவேண்டிய நிலை

(வவனியா)

வவனியாவில் தொடர்ந்து இரண்டு வாரமாகப் பெய்த மழையினால் ஏற்கனவே விதைக்கப்பட்ட வயல்கள் முற்றாக அழிந்துவிட்டன.

இவ்வயல்களில் திரும்பவும் விதைக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளதாக வவனியா விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்படியான இக்கட்டான நிலையிலும் விவசாயிகளுக்கு வழங்கும் கடனுதவியை வவனியா தெற்கு தமிழ்ப்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இன்னும் வழங்கவில்லையென்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

வவனியா தெற்கு சிங்களப் பிரிவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளுக்கான கடனுதவியை வழங்கி முடித்துவிட்டதென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர் (க)

## பேராசிரியர் ச. தனஞ்சயராஜசிங்கம்

கல்வித் துறையிலே எவ்வெச் சாதனைகளைச் செய்யவேண்டுமென ஆசை கொண்டாரோ, அவ்வாசைகளைப் பூர்த்தி செய்துவிட்டு 26-10-77 அன்று இவ்வுலக வாழ்வைத் துறந்தார் பேராசிரியர் கலாநிதி தனஞ்சயராஜசிங்கம். 'சிங்கி' என்ருல் அவருடன் பயின்ற, அவரிடங் கற்ற யாவருக்குந் தெரியும். கலைமாணிப் பட்டப் பரீட்சையிலே முதற்பிரிவிலே தேறி, இலங்கைப் பல்கலைக் கழகத்தில் துணைத் தமிழ் விரிவுரையாளராக நியமனம்பெற்ருர். பேராசிரியர் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், சதாசிவம் ஆகியோரிடம் தமிழ் கற்ற அவர், துணை விரிவுரையாளராகக் கடமை செய்யுங் காலத்தில் பல்கலைக்கழகப் புலமைப் பரிசில் பெற்று அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே பட்டப்பின் படிப்பு மேற்கொள்ளச் சென்ருர். அங்கு பல்கலை அறிஞர் பேராசிரியர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரின். ஆராய்ச்சி மாணவனுக மொழியியல் துறையிலே ஆய்வுகளை மேற்கொண்டார். டச்சுக்காரர் காலத்து உத்தியோக ஆவணங்களிலே கையாளப்பட்டுள்ள மொழி இயல்புகள் பற்றி ஆய்வுக் கட்டுரை எழுதி எம். லிற். (M. Litt.) பட்டத்தினைப் பெற்ருர். பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்திஞல் வழங்கப்படும் விடுமுறைச் சலுகையை உபயோகித்து 1969ம் ஆண்டு எடின்பரோ பல்கலைக்கழகத்திற்குத் தன் கலாநிதிப் பட்டப் படிப்பை மேற்கொள்ளச் சென்ருர். பேராசிரியர் ஜோன் லயன்ஸ், கலாநிதி ஆஷர் ஆகியோரிடம் பயின்று "இலங்கைப் பேச்சுத் தமிழ்ப்பெயர்ச் சொற்களின் ஒலியமைப்பு" என்னும் விடயம் பற்றி ஆய்வுக் கட்டுரையெழுதி, 'கலாநிதிப் பட்டத்தினைப் பெற்ருர். தொடர்ந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றிய டாக்டர் 'சிங்கி' 1974ல் வித்தியாலங்கார வளாகத் தமிழ்-இந்துப் பண்பாட்டுத் துறைத் தலைவராக நியமனம் பெற்ருர். சிரேஷ்ட விரிவுரையாளராகிய காலந்தொடக்கம் அவர் மேற்கொண்ட ஆய்வுகளைப் பரிசிலனைசெய்த இலங்கைப் பல்கலைக்கழகத்தினர் அவருக்கு இவ்வருடம் துணைப் பேராசிரியர் (Associate Professor) பதவியினை அளித்துக் கௌரவித்தனர். கல்வித்துறையிலே ஒருவர் பெறக்கூடிய உயர்ந்த பதவி இதுவாகும். இந்த ஆசை நிறைவேறியவுடன் இந்த உலக ஆசையையும் விட்டு நீங்கிஞர்போலும்.

எனக்கு அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலே ஆசிரியராகஇருந்தார். அவருடன்சேர்ந்து பேராதனையிலே தமிழ்த் துறையிலே கடமையாற்றும் பேறு எனக்குக் கிடைத்தது. பின்னர் 1969ம் ஆண்டு தொடக்கம் 1972ம் ஆண்டு வரை எடின்பரோ பல்கலைக் கழகத்திலே அவருடன் சேர்ந்து நானும் கலாநிதிப் பட்டத்திற்குரிய ஆய்வு மேற்கொள்ளும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அம்மூன்று வருட வாழ்விலே அவருக்கு இரண்டு மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒன்று அவருடைய பெயர் விளங்க ஓர் ஆண் குழந்தை பிறந்தது. தன்னுடைய பெயரில் முதற் பாதியை (தனஞ்செயன்) அவனுக்கு வழங்கிஞர். இரண்டாவது நிகழ்ச்சி கலாநிதிப் பட்டம் பெற்றது. எப்படியாவது கலாநிதிப் பட்டம் பெறவேண்டும் என்பது அவருடைய வேணவா. அதனுல், அக்காலத்தில் காசுழைத்துக் கார் கொண்டுவரக்கூடிய தனது ஏழாண்டை விடுமுறையினை அதற்காகச் செலவழித்து அப்பட்டத்தினைப் பெற்றபோது மட்டில்லா மகிழ்ச்சியடைந்தார். தூர தேசத்திலே இவ்விரு மகிழ்ச்சிகர நிகழ்ச்சிக் காலங்களில் நான் அவருடன் இருந்ததை எண்ணும்போது பிரிவுத்துயர் அதிகரிக்கின்றது.

பேராசிரியர் 'சிங்கி'யின் ஞாபக சக்திபற்றி அவருடைய மாணவர்கள் யாவருக்குந் தெரியும். பக்கம் பக்கமாக, வரிக்கு வரியாகப் பாடஞ்சொல்லும் அபாரதிறமை பெற்றிருந்தார். அவர் ஆய்வு மேற்கொண்ட துறைகளிலே முக்கியமாக விளங்குவது மொழியியல் துறையேயாகும். அத்துறையிலே அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் Indian Linguistics, Journal of the Indo-Iranian, The Speech, International Journal of Dravidian Linguistics. ஆசிய உலகப் புகழ் பெற்ற ஆய்வு இதழ்களிலே வெளியாகின. அகில உலகத் தமிழாராய்ச்சி மன்றம் மலேசியா, சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலே நடாத்திய மாநாடுகளிலே பங்குபற்றியதோடன்றிப் பல ஆய்வுக்கட்டுரைகளையும் சமர்ப்பித்தார்.

ஈழத்திலே ஆறுமுகநாவலர் பற்றியும் அவர் வாழ்ந்த காலம் பற்றியும் ஆராய்ந்தவர்களுட் கூடிய அளவு நூல்களும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியவர் பேராசிரியர் 'சிங்கி'. பண்டிதமணியின் அன்புக்குப் பாத்திரமான இவர் அவருடைய துணையுடன் ஆறுமுகநாவலர் பற்றிய பல புதிய தகவல்களை வெளியிட்டார். இவர் மேற்கொண்ட ஆய்வுத்துறைகளில் ஒப்பியல் ஆய்வும் ஒன்ருகும். கோவலன் ஒரு சோக நாடகத் தலைவன் என்பதைக் காட்ட ஷேக்ஸ்பியருடைய சோகநாடகத் தலைவர்களுடன் கோவலனை ஒப்பிட்டு சில கட்டுரைகள் வரைந்துள்ளார்.

சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணுமலைப் பல்கலைக்கழகம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகியன அவரைக் கலாநிதி எம். லிற், பட்டத்தேர்வுகளுக்குப் பரீட்சகராக நியமித்துக் கௌரவித்தன.

நவீன மொழியியற் கோட்பாடுகளுக்கமையத் தமிழ் மொழிக்குப் புதிய இலக்கணமொன்று அமைக்கவேண்டுமென அவர் அடிக்கடி கூறுவதுண்டு. அவர் வாழ்வு இவ்வளவு விரைவாக முடிந்திராவிடில், இம்முயற்சியினை மேற்கொண்டு முடித்திருப்பார். அதற்குரிய அறிவும், திறனும் ஆய்வுநோக்கும் அவரிடமிருந்தன.

கலாநிதி
அ. சண்முகதாஸ்
(தமிழ்த்துறை,
யாழ்ப்பாண வளாகம்.)

## வவனியாவில் சிறுவர்தின விழா

வவனியா, திங்கள்

வவனியா மகாவித்தியாலயத்தில் சிறுவர் நலன்புரிச் சங்கத்தின் ஆதரவில் சர்வதேச சிறுவர் தினவிழா கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு வவனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. சண்முகநாதன் தலைமை தாங்கிஞர்.

டாக்டர் கே. இராஜலிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

## அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

சங்கரனை வைரவ சுவாமி கந்தசுவாமி கோவில் வசந்த மண்டப அடிக்கல் நாட்டு விழா 12-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறும். மீல்க்வைற் அதிபர் திரு. க. கனகராசா தலைமைவகிப்பரர். இரவு 7 மணிக்கு பண்ணிசைமணி சி. விநாசித்தம்பி கந்தவிரதம் மகிமைபற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

# கிழக்கு மாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகம்

— பேராசிரியர் ப. சந்திரசேகரம் —

(கல்விப்பீடம், பல்கலைக்கழகம், கொழும்பு)

பல்கலைக்கழகம் ஒரு நாட்டின் மாங்கல்யம். அது ஒரு நாட்டு மக்களின் கலாச்சாரப் பாரம்பரியத்தை ஓம்பவளர்ப்பதோடு, ஒரு நாட்டினை சமகால துரிதமுழுமை வளர்ச்சிக்கேற்ப சமூகப் பொருளாதார கலாசார அமைப்பினை உயர்விக்கும் ஆற்றல் கொண்டது என்பது அறிஞர்கள் துணிபு.

உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானி கல்விமான் அயற்ஸ்ரீன், இஸ்ரவேல் பல்கலைக்கழகம் நிர்மாணிக்கப்படவேண்டும் என்று ஐக்கிய அமெரிக்காவில் பிறின்ஸ்ரன் பல்கலைக்கழகத்தில் உரையாற்றிய பொழுது, உலகில் இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ்ந்த யூத மக்கள் உரிமைகொண்ட இனமாக வாழ்வதற்கு ஒரு தனிநாட்டிலும் பார்க்கப் பல்கலைக்கழகம் முக்கியமாகும் என்று எடுத்துரைத்தார்கள்.

நமது நாட்டில் இன்றைய அரசு கிழக்கு மாகாணத்திலும் தென்மாகாணத்திலும் பல்கலைக்கழக நியமங்களை உருவாக்கும் நோக்கம் கொண்டுள்ளது என அறியக்கிடக்கின்றது. இவ்விரு மாகாணங்களிலும் பல்கலைக்கழகம் அமைப்பது மிகவும் வரவேற்கத்தக்கது; அத்தியாவசியமானது. ஆனுல் இக்கருத்து புதுக்கருத்து என்று கொள்வதற்கில்லை. ஏறக்குறைய எழுபது ஆண்டுகளாக இந்நாட்டில் பல தன்னிறைவு பெற்ற பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டும் என்னும் கருத்து அறிஞர்களிடையே நிலவி வந்திருக்கின்றது.

நமது நாடு ஒரு சிறிய நாடென்றும், எனவே பல பல்கலைக்கழகங்கள் அமைப்பதில் பயனில்லையென்றும் கருதப்படுகின்றது. கல்வி விசேடமாக உயர்கல்வி ஒருசிலரின் ஏகபோக உரிமைச்சொத்து என்று கொள்பவர்களின் வாதமே இதுவாகும். ஏறக்குறைய ஒன்றரைக்கோடி மக்கள் வாழும் இந்நாட்டில், இருபத்தைந்து லட்சம் மாணவர்கள் ஆரம்ப இடைநிலைக் கல்லூரிகளில் கற்கும் இந்நாட்டில், ஒன்றரை லட்சம் மாணவர்கள் கல்விப் பொதுத்தராதப் பரீட்சை எடுக்கின்றனர். உலக நாடுகள் ஆசியநாடுகளோடு ஒப்பிடும்பொழுதும் நமது நாட்டின் பல்கலைக்கழக மாணவர்கள் தொகை குறைவு என்றே கொள்ளவேண்டும். ஒரு பல்கலைக்கழகமும், ஆறு பல்கலைக்கழக நியமங்களும் இருபதினாயிரம் மாணவர்களும் இந்நாட்டின் கல்விநிலைக்குப் போதுமானதல்ல. மேற்கத்திய நாடுகள் மட்டுமல்ல வளர்வுறும் நாடுகளிலும் நமது நாட்டின் சனத்தொகை குறைந்த நாடுகளிலும் பல பல்கலைக்கழகங்கள் உள. அவுஸ்திரேலியா, கியூபா, கனடா போன்ற நாடுகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கக்கூடிய மனிதவளம், இயற்கைவளம், தாதுப்பொருட்கள் ஆகியன உண்டு.

அருணுசலம் துரையவர்கள் 1905-ம் ஆண்டளவிலேயே இந்நாட்டில் பல பல்கலைக்கழகங்கள் நிறுவப்படவேண்டும் என்று கூறியுள்ளார்கள். அதன்பின்னர் 1927ம் ஆண்டில் சட்டசபையில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவி, பல இணைப்புக் கல்லூரிகள் நிறுவப்படவேண்டும் என்று கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளாயிருந்த திருவாளர்கள் எம். எம் சுப்பிரமணியம், ஈ ஆர். தம்பிமுத்து ஆகியோர் கிழக்கு மாகாணம் பொருளாதார வளம் சிறந்தபிரதேசம், எனவே விவசாயம், விஞ்ஞானம், சமுத்திரவியல், மக்கள் கலாச்சார மரபு, ஆசிரியகல்வி, தொழில் நுட்பம் ஆகிய பல்துறைகளைக் கொண்ட பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென எடுத்துரைத்தார்கள். இக்கருத்தினை இராமநாதன்துரை அவர்கள் இந்துக் கல்விக்கு அரும்பணி செய்த திரு. எஸ். இராசரத்தினம் அவர்கள், யாழ்ப்பாணம் கனகரத்தினம் மகாவித்தியாலய நிறுவுனர் கனகரத்தினம் அவர்களும் ஆதரித்துப் பேசினர்கள்.

விபுலானந்த அடிகள் அண்ணுமலைப் பல்கலைக்கழகம் நிறுவுவதற்கு முக்கிய கர்த்தா என்பதை உலகறியும் அதே போன்று யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டுமென்று 'விவேகானந்தன்' என்னும் சஞ்சிகையில் திறம்பட எடுத்துரைத்தார்.

கிழக்கு மாகாணத்தின் கலங்கரை விளக்கமாக விளங்கும் சிவானந்த வித்தியாலயம் 1929-ம் ஆண்டில் அமைக்கப்பட்டது. அன்றுதொட்டு இக்கல்லூரி பிற்காலத்தில் வங்கக் கவிஞர் தாகூர் அமைத்த கலைக்கோயிலாம் விஸ்வபாரதி போன்று, இம்மாகாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட வேண்டுமென்ற அபிலாஷை கொண்டிருந்தார்கள்.

நாடு விடுதலையடைந்தபின்னர். இந்நாட்டின் பல்கலைக் கல்விபற்றி ஆராய அமைத்த குழுக்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகப் பேராசிரியர் நீடாம் குழு திரு குணவர்த்தனு குழு ஆகியனவாகும். இரு குழுக்களும் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் நிறுவப்பட்ட பின்னர் கிழக்கு மாகாணத்தில் ஒரு நிறுவனம் அமைக்கப்படவேண்டுமென்று சிபாரிசு செய்தார்கள். இரு குழுக்களும் கிழக்கு மாகாணம் பொருளாதார வளமும், பண்பாட்டுக் கலாச்சார மரபும் உள்ள பிரதேசம் என வலியுறுத்தி இம்மாகாணத்தின் துரித வளர்ச்சிக்கு இந்நிறுவனம் முக்கியமாகும் எனக் கூறிஞர்கள்.

கிழக்கு மாகாணம் அளித்த சிறந்த மக்களுள் ஒருவராகிய திரு. வ. நல்லையா அவர்கள் இப்பிரதேசத்தின் உயர்கல்வி பற்றி அரசாங்க சபையிலும் பாராளுமன்றத்திலும் அடிக்கடி எடுத்துக்கூறிஞர்கள்

முன்னைய அரசாங்கமும்கிழக்கு மாகாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதாலும் அது செயற்படவில்லை.

ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கு முன்னர், அறிஞர்கள் குழு இப்பிரச்சனையை ஆராய்ந்து இந்நிறுவனம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டுமென்று அரசுக்கு ஆலோசனை கூறுதல் வேண்டும்.

பிரதேச பல்கலைக்கழகங்கள் உலகமெங்கினும் வளர்ந்து கொண்டு வருகின்றன. இந்நாட்டில் பல பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படுவதன்மூலமே அந்நாட்டின் பல்வகைப் பொருளாதார வளர்ச்சி தத்துவ மார்க்கம் பண்பாட்டு மரபு ஆகியன சிறந்தோங்கும்.

அரசும், இந்நாட்டு மக்களும் இப்பிரதேச மக்களும் இக்கருத்துக்களைச் சிந்தித்து, இது செயலாக்கம்பெற உழைப்பதன் மூலமே இம்மாகாணம் உயரும், நாடு நலன் பெறும்.

### "இலங்கையில் வாழும்

# சகல இந்திய வழியினருக்கும் பிரஜாவுரிமை வழங்குக"

[யாழ்ப்பாணம்]

"இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினர் அனைவருக்கும் பிரஜா உரிமை வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு லங்கா-பாரத ஒற்றுமை முன்னணி அமைப்பாளர் டாக்டர் ஏ. அமிர்தலிங்கம், பிரதமர் திரு. ஜே ஆர். ஜயவர்த்தனுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

விஜயன் இலங்கைக்கு வந்த நாள்தொடக்கம், சிங்கள இனம் அழியாது தொடர்ந்து வாழ்வதற்கு தமிழர்களே காரணமாக இருந்தார்கள். அப்படிப்பட்ட தமிழர்களுக்குச் சிங்கள அரசாங்கங்கள் பாதுகாப்புக் கொடுக்க விரும்பவில்லை. ஆகவே தமிழர்கள் தமக்குத் தாமே பாதுகாப்புத் தேடும் முறையை அவர்களிடமே விட்டுவிடவேண்டும்.

மகாவன்னிப் பிரதேசத்தில் 1933ம் ஆண்டுக்குப் பின் முடிக்குரிய காணிகளிலே அல்லதுகோவில்காணிகளிலோ குடியேறிய அல்லது குடியேற்றப்பட்ட சிங்களவர்கள் அனைவரும் மகாவன்னிப் பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் உள்ள கடவுச்சீட்டு முறை ஒழிக்கப்பட்டு, இரு நாடுகளுக்கும் பொது வான நாணயம், பொதுவான பாதுகாப்புப் படை இருக்க வேண்டும். (க-அ)

## தொலைபேசி பாதிப்பு

(வவனியா)

வவனியாவில் தொடர்ந்து இரண்டுவாரமாக மழைபெய்து கொண்டிருக்கின்ற காரணத்திஞல் தொலைபேசிகள் ஒன்றும் சரியான முறையில் இயங்கவில்லை (க

## தட்டுப்பாடு

(வவனியா)

வவனியாவில் உள்ள கோழிப்பண்ணைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கோழிகளுக்கான கோழித்தீன் தட்டுப்பாடே இதற்கு காரணமாகும். (க)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-45
சந்திரபாபு
கவலை இல்லாத
மனிதன்

RIO (Jaffna)
Now Showing
VATICAN
JEWEL ROBBERY
From 10-11-77
தில்லகி (ஹிந்தி)

Regal (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m. only
THE DIVORCE OF LADY
(Color)

தினசரி மு.ப. 10-30 பி.ப 2-30 6-30, 9-45
மனோஹரா ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா நடித்த
(யாழ்ப்பாணம்)
கல்யாணமாம் கல்யாணம்
9-11-77
சிவாஜி - ஜெமினி - நாகேஷ் நடித்த
உனக்காக நான் (கலர்)

சாந்தி எமது தீபாவளித் திரைவிருந்து!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
[யாழ் நகர்]
இரசிகர்களின் அமோக ஆதரவைப்பெற்று 2-வது ஜனத்திரள்வாரமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது
திலிப்குமார் மதுபாலா பிருதிவிராஜ்கபூர்
அக்பர் (தமிழ்) - புதிய பிரதி நடனங்கள் கலரில்

கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
வின்ஸர் சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
[யாழ்ப்பாணம்] கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ் நகர்]
தினசரி 4 காட்சிகள்
துணிவே துணை

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த் நடித்த
அன்னக்கிளி

கடைசி வாரம்
ராணி ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
(யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
பெண் தெய்வம்

நான்காவது வெற்றி வாரம்!
ராஜா- யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா
எம். ஆர். ராதா, கே. ஆர். விஜயா
நடித்த
தசாவதாரம்
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)



## புதிய பொறுப்பதிகாரி

(வவனியா)
வவனியா பொலிஸ் நிலையத்தின் தலைமைப் பொறுப்பதிகாரியாக ஐனுப். எம் எவ் நூர்டீன் கடமையேற்றுள்ளார்.

இவர் இதற்கு முன்னர் பொலநறுவைப் பொலிஸ் நிலைய தலைமைப்பொறுப்பதிகாரியாக கடமையாற்றியவராவார்.

...

## 60 கூப்பன்கள் திருட்டு

(திருகோணமலை)
திருகோணமலையைச்சேர்ந்த கிண்ணியாவில் உள்ள காரியாதிகாரியின் அலுவலகத்திலிருந்து சுமார் 60, வழங்கப்படாத கூப்பன்கள் திருடப்பட்டுள்ளன.

இதுசம்பந்தமாக மேற்படி காரியாலயதின் காரியாதிகாரி சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார் (க)

—

## திருட்டு வலைகள் மீட்பு

(சங்கானை)
மாதகல் துறையில் கடலில் இடப்பட்டிருந்த சுமார் எண்ணாயிரம் பெறுமதி வாய்ந்த மீன் வலைகளில் ஐயாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தவற்றை தாளையடி மயிலிட்டியில் வைத்து பொலிசார் கைப்பற்றியதுடன் சந்தேகத்தின் பேரில் இராமசாமி கெனடி சிங்கோ ஆகிய இருவரையும் கைது செய்துள்ளனர்

இவ்வலைக்களவு தொடர்பாக மாதகலைச்சேர்ந்த பர்ணந்துபிள்ளை யேசுநாயகமும் அவர் சகோதரரும் செய்துகொண்டபுகாரைத் தொடந்து விசாரணையில் ஈடுபட்ட சங்கானைப் பொலிசார் சந்தேகநபர்களை கைது செய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

நீதிபதிமுன் இத்த வலைகள் தங்களுடைய தல்ல வென சந்தேகநபர்கள் கூறியதைத் தொடர்ந்து முறைப்பாட்டுக்காரரிடம் வலைகளைக் கொடுக்கும்படியும் சந்தேகநபர்களை 78 ஆம் ஆண்டு பெப்ரவரியில் கோர்ட்டில் ஆஜராகும் படியும் உத்தரவிட்டார். (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
உலகம் சுற்றும் வாலிபன்
(கலர்)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 4-30, 7-00
Russian Roulette

ஸ்கந்தா அதிபரிடம் கொள்ளை:

# சந்தேகநபர்கள் இருவரும் பிணை

(மாவிட்டபுரம்)
சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆசிரியர்களது சம்பளப் பணம் கொள்ளையிடப்பட்டது தொடர்பாகக் கைதாகி றிமாண்டிலிருந்த இரு சந்தேகநபர்களும் தலா 1,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் திரு சி தியாகராசா தமது கல்லூரி ஆசிரியர்களது சம்பளப் பணமான 31,627 ரூபாவை வங்கியில் இருந்து எடுத்துச் சென்ற சமயம் இளைஞர் கோஷ்டி ஒன்று அவரை வழிமறித்து அப்பணத்தைக் கொள்ளையடித்தது தெரிந்ததே.

இது தொடர்பாகச் சங்கானைப் பொலிஸாரால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட சண்டிலிப்பாயைச் சேர்ந்த க. கதிர்காமத்தம்பி, இ. பரநிருபசிங்கம், செ. பரமேஸ்வரி ஆகியோர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஆஜர்செய்யப்பட்ட சமயம் செ. பரமேஸ்வரி மட்டும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு ஏனைய இருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இவ்விருவரும் மீண்டும் நீதிபதி முன்னர் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இவர்களைப் பிணையில் விடவேண்டுமென வாதாடினார். இச்சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கு. விநோதன், செ. புண்ணியமூர்த்தி, எஸ். சிவபாக்கியநாதன் ஆகியோரும் இவர்களைப் பிணையில் விடுமாறு கோரினர்.

நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் இரு சந்தேகநபர்களையும் தலா 1,000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

## உரியவரிடம் கார் ஒப்படைப்பு

இக்கொள்ளை தொடர்பாகக் கைப்பற்றப்பட்டு, சுன்னாகம் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த காரை அதன் உரிமையாளரிடம் கொடுக்குமாறு நீதவான் திரு எம். டி. யேசுரத்தினம் உத்தரவிட்டார்

அளவெட்டி தெற்கைச் சேர்ந்த சி சண்முகம் என்பவருக்குச் சொந்தமான 'ஏ 40' காரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்தபோது கார்ச் சொந்தக்காரரின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு காரிலிருந்த கைவிரல் அடையாளங்கள் படம் பிடிக்கப்பட்டுவிட்டன என்றும், கார்ச் சொந்தக்காரர் இக்காரை வைத்தே வாழ்க்கையை ஓட்டுவதாகவும் மீண்டும் காரை அதன் உரிமையாளரிடம் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றும் நீதவானிடம் கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து காரை உரிமையாளரிடம் கொடுக்குமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

(பண். திரு-இ)

# வெங்காயம் திருடினராம்: மூவர் றிமாண்டில்

[மாவிட்டபுரம்]
இரவு நேரத்தில் வேலியை வெட்டி, வெங்காயம் களவாடினராம். இதுதொடர்பாக கைதான மூன்றுபேர் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

பன்னாலையைச் சேர்ந்த கதிரேசு சண்முகம் என்பவருக்குச் சொந்தமான 900 ரூபா பெறும்தியான வெங்காயம் இரவு நேரத்தில் வேலி வெட்டப்பட்டுக் களவாடப்பட்டது குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

களவாடிச் சென்ற திருடர்கள் வழி நெடுகிலும் வெங்காயத்தைக் கொட்டிச்சென்றிருந்தனர். அதிகாலை கீரிமலையிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பஸ் நிற்கும் பஸ்தரிப்பு நிலையம் வரை வெங்காயம் கொட்டிச் செல்லப்பட்டிருந்தமையால் பஸ்ஸில் களவாடிய வெங்காயம் ஏற்றிச் செல்லப்பட்டிருக்கலாம் எனக்கருதி பஸ்ஸில் சென்றவர்களிடம் விசாரித்தபோது மல்லாகத்தில் அவ் வெங்காயம் இறக்கப்பட்டது தெரியவந்தது.

காங்கேசன்துறைப் பொலிசாரின் உதவியுடன் மேற்படி வெங்காயம் களவு கொடுத்தவர் மல்லாகத்திலுள்ள வீடொன்றில் வெங்காயத்தைக் கண்டுபிடித்து அது தம்முடையது எனத் தெரிவித்ததைத் தொடர்ந்து காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு கே. சிவப்பிரகாசம் மேற்படி வெங்காயத்தை கைப்பற்றியதுடன் வி. ஏழுமலை என்பவரையும் மற்றும் அளவெட்டியைச் சேர்ந்த இருநபர்களையும் கைது செய்து மல்லாகம் நீதிபதிமுன் ஆஜர் செய்தார்.

நீதிபதி திரு. டி. யேசுரத்தினம் அவர்களை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

[அ]

## ஜி. ஜி. காங்கிரஸ் ஆராயும்

யாழ்ப்பாணம், செவ்.
பிரதமர் அறிவித்துள்ள மும்மொழித் திட்டம் பற்றித் தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் ஆராயவிருக்கிறது.

கோண்டாவிலிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் இம்மாதம் 19-ம் திகதி ஜி. ஜி. காங்கிரஸ் கமிட்டி கூடுகிறது இக்கூட்டத்தில் மும்மொழித்திட்டம் பற்றி ஆராயப்படும்.

இக் கூட்டத்தில் தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸின் பெயர் மாற்றம் பற்றியும் ஆராயப்படவிருக்கிறது. [க-அ]

## மல்லாகம் கொலை வழக்கு

(யாழ்ப்பாணம்)
மல்லாகம் கொலைவழக்கு விசாரணை நேற்றுக் காலை யாழ். மேல்நீதி மன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல் காதர் முன்னிலையில் ஆரம்பமானது.

இவ்வழக்கில் 76 செப்டம்பர் 30-ம் தேதி மல்லாகத்தில் கந்தையா இராஜேஸ்வரனை கொலைசெய்ததாக கதிர்ப்பிள்ளை ஆறுமுகராசா அல்லது சின்னராசா மீது குற்றம் சாட்டட்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி ஆர். ஈ. தம்பிரத்தினம் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சட்டத்தரணி எம். குணரத்தினம் ஆகியோர் ஆஜரானார்கள் அரசதரப்பில் சட்டத்தரணி பி. சிவலோகநாதன் வழக்கை நடத்தினார்.

## அறிவித்தல்

தீபாவளிப் பண்டிகையை முன்கூட்டு 10-11-77 வியாழக்கிழமை 'ஈழநாடு' ஊழியருக்கு விடுமுறையாதலால் 11-11-77, வெள்ளிக்கிழமை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

### மணிவாக்கு

அகத்தில் தூய்மையுடையோன்; புறத்தில் அசுத்தமாயிருக்கமாட்டான்.
—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## மறுபரிசிலனை-2

குறைந்தபட்சக் கோரிக்கையாக ஆறு அம்சத் திட்டமொன்றைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்னைய சிறிமா அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்து அது சம்பந்தமாகப் பேசுவதற்கும் விருப்பம் தெரிவித்திருந்தது.

சிறிமா அரசு ''இந்தக்கடிதம் கிடைத்தது'' என்றுமட்டுமே பதில் அனுப்பியது.

தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்களை மக்கள் பிரதிநிதிகள் என்றோ அவர்கள் ஓர் இயக்கத்தினர் என்றோ சிறிமா அரசு மதிப்புக்கொடுக்கவில்லை. கூட்டணியினரை அது துச்சமாக மதித்தது.

ஆட்சியிலிருந்து வெளியேறவேண்டிய காலகட்டம் வந்தபோதுதான் ''தமிழர் பிரச்னைகளை அறிந்துகொள்வதற்காக''த் தமிழ்பேசும் எம். பிக்களின் மாநாட்டை பிரதமர் சிறிமா கூட்டி அந்த மாநாட்டின் சிபார்சின்பேரில் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பீக்களையும் தலைவர்களையும் அழைத்தார் இந்த அழைப்பை ஏற்றுக் கூட்டணியினரும் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டனர்.

பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன; விபரங்கள் வெளிவரவில்லை; தேர்தல் வந்தது அத்துடன் அந்தப் பிரச்னை முடிந்தது.

திருமதி சிறிமா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு 1970-ம் ஆண்டில் ஆட்சிபீடத்துக்கு, வந்ததும் புதிய குடியரசு அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு 'அரசியல் நிர்ணய சபையை' அமைத்தது, ஆட்சிமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களானார்கள்.

இந்தச் சபையில் கலந்துகொள்வதா இல்லையா என்ற பிரச்னை வழமைபோல தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தலையெடுத்து ''கலந்துகொள்வது'' என்று இறுதியில் தீர்மானிக்கப்பட்டது.

அரசியல் நிர்ணயசபையில் அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் கொண்டுவந்த திருத்தங்கள் அத்தனையும் பரிசிலனை செய்யப்படாமலே நிராகரிக்கப்பட்டதால் அதில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதில்லை யென்று விடுதலைக்கூட்டணி வெளியேறியது.

இது நியாயம்.

தங்கள் சம்மதமில்லாமல் உருவாக்கப்பட்ட குடியரசு அமைப்பைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அமரர் செல்வநாயகம் தமது எம்.பி. பதவியை ராஜினாமாச் செய்து மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதன் மூலம் நிரூபித்தார்.

இதுவும் உண்மை; யாரும் மறுக்கமுடியாது.

இப்போது பொதுத்தேர்தலின் பின் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் அரசியலமைப்புக்கு இரண்டாவது திருத்தம் கொண்டுவந்தது. இதில் விடுதலைக்கூட்டணியினர் கலந்துகொள்ளவில்லையானாலும் எதிர்ப்பின்றி அது நிறைவேறியது.

இத்திருத்தம் பழைய அரசியலமைப்பையே மாற்றியிருக்கிறது என்பதை எவரும் ஏற்றுக்கொள்வர்.

இதன்பின்னர்தான் அரசியலமைப்பில் ஏற்ற திருத்தங்களைச் செய்வதற்கு பேரவை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

இன்றுள்ள அரசியலமைப்பு பெரிதும் மாறுனது; ஆட்சிபீடத்திலுள்ள அரசும் புதியது.

அரசியலமைப்பில் திருத்தம் செய்வதன்மூலம் தமிழர் 'பிரச்னைக்குத் தீர்வு காணமுடியுமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரைத் தெரிவுக்குழுவில் சேரும்படியும் அரசாங்கம் அழைப்பு விடுக்கின்றது.

கூட்டணி எம். பிக்களையும் எம். பிக்களாக மதித்து கூட்டணியையும் இயக்கமாக மதித்து தமிழருக்குப் பிரச்னைகள் இருப்பதை ஒப்புக்கொண்டு தீர்வுகாண ஆர்வம்கொண்டுள்ள அரசு விடுக்கும் அழைப்பு இது.

இன்றைய அரசியல்அமைப்பைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்று அதன்கீழ் இயங்கவில்லையா? இதுபற்றி நாளை ஆராய்வோம்.

## மட்டுவில் சிவன்கோவிலுக்கு சிவலிங்கம் தேவை

யாழ்ப்பாணம செவ்.

இனந்தெரியாத நபர்களினால் பாதிப்புற்றுச் சிதைந்த நிலையில் இருந்து வரும் மட்டுவில் கல்வத்து சிவன் கோவில் சிவலிங்கத்திற்கு இணையான ஒரு சிவலிங்கம் தேடிவருகிறார் ஆலய நிர்வாகி திரு. து. சடாட்சரம். இவ்வாலயத்துச் சிவலிங்கம் மிகவும் தொன்மை வாய்ந்ததென்றும் திருடர்களினால் சில காலத்தின் முன் இது உடைக்கப்பட்டுக் கவலைக்குரிய நிலையில் இருந்து வருவதாகவும் இதற்கு இணையான ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சியில் இதுவரை பலனேதும் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கும் திரு. சடாட்சரம் உரிய இடத்திற்குப் பொருத்தமான ஒரு சிவலிங்கத்தை உபகரித்து உதவுமாறு சைவாபிமானிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதற்கான செலவைத் தாம் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

சிவலிங்கம் கிடைக்கப்பெற்றதும் அதனைப் பிரதிஷ்டை செய்து விரைவிலேயே சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடத்தவிருப்பதாகவும மகும்பாபிஷேகத்திற்கான சகல வசதிகளுமிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். [அ]

பங்களாதேஷுக்கு

## பாதிஉப்புடன் கப்பல்சென்றது!

மாவிட்டபுரம், திங்.

இலங்கை உப்பை பங்களாதேஷ் நாட்டுக்கு ஏற்றிச் செல்வதற்காக காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு வந்திருந்த கப்பல் ஏற்றப்பட்ட ஒருபகுதி உப்புடன் திரும்பிச் சென்று விட்டது.

காற்று, மழை காரணமாகக் காங்கேசன்துறைக் கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டமையினாலும் கொந்தளிப்பின் மத்தியிலும் ஏற்றுமதி செய்யக் கூடிய முறையில் ஏனைய துறைமுகங்களைப் போல் இத்துறைமுகம் வசதியற்றிருப்பதாலும் உப்பு ஏற்றுமதி வேலைகள் சிலதினங்கள் தாமதித்தன.

இதையடுத்து உப்பு ஏற்றுவதற்காகக் காங்கேசன்துறைமுகத்திற்கு வத்து தங்கிநின்ற பாகிஸ்தான் கப்பலான 'ஏஷன் எனேர்ஜி' என்ற கப்பல் ஏற்றப்பட்ட ஒருபகுதி உப்புடன் பங்களாதேஷ் நோக்கிச் சென்று விட்டது.

ஏற்றுமதி செய்யப்படவிருந்த 9 ஆயிரம் தொன் உப்பில் சுமார் 4 ஆயிரம் தொன்வரையிலேயே இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. [அ]

## பஸ் நெரித்து பெண் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

பஸ்ஸில்ஏற முற்பட்ட வயோதிப மாது ஒருவர் தவறி விழுந்து அந்த பஸ்ஸுக்கே பலியான சோக சம்பவம் ஒன்று கல்வியங்காடு சந்திக் கருகாமையில் இடம்பெற்றுள்ளது. கீழேவிழுந்த அப்பெண்ணின் மீது பஸ் சக்கரங்கள் ஏறியதால் இம்மரணம் சம்பவித்தது.

நேற்று அதிகாலை 6-30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைநோக்கி சென்றுகொண்டிருந்த இ. போ. ச. பஸ் கல்வியங்காடு சந்திக்கருகாமையில் உள்ள பஸ்தரிப்பில் நின்ற சம்யம் மரியம்மா (56 வயது) என்ற பிரஸ்தாப பெண் அந்த பஸ்ஸில் ஏறமுற்பட்டபோது தவறி அந்த பஸ் சில்லுக்குள் விழுந்ததால் அவரது இடுப்பு நெரியுண்டநிலையில் யாழ். பெரியாஸ்பத்திரியில்அனுமதிக்கப்பட்டார். அங்கு அவரது உயிர் பிரிந்தது. (கா-அ)

......

## பால்மா மறைவு

[சங்கானை]

சங்கானை ப. நோ. கூ, சங்கத்தின் சிலம்பு புளியடி கிளையில் பால்மா விநியோக சீர்கேட்டினால் குழந்தைகளுக்கு பால்மா கிடைக்காமல் பலர் கஷ்டத்திற்காளாகியுள்ளனர்.

கடந்த மாதத்திற்கான கோட்டாமாவிற்கான சீட்டை முறைப்படி சங்கத்தில் இடப்பட்டு சங்கத்திலிருந்து சுமார் முக்கால் மைல் தூரத்தில் உள்ள 32-ம் கிளைக்கு வராமல் மறைந்த மர்மம் பற்றி விசாரணை நடத்துமாறு கிளை குழுத் தலைவர் திரு. எஸ். கதிகாமசாமி சங்கானை ப.நோ கூ. சங்கத் தலைவருக்கு புகார் செய்துள்ளார். [க

## பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 175,184-47 சதம் கிடைத்துள்ளது. இந்நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை கணக்கு இல. 3840க்கு நேராகச் செலுத்தலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி ரூபா | 150,033-57 |
| பரி. யாக்கோபு தேவாலயம், நல்லூர் | 500-00 |
| தென் இந்திய திருச்சபை ஊடாக | 12,604-39 |
| பரம்சோதி ஜோர்ஜ் | 100-00 |
| பு. சிவானந்தன், இணுவில் | 100-00 |
| அ. நீலகண்டன், சுண்டிக்குளி | 51-00 |
| த அ. தம்பித்துரை, யாழ்ப்பாணம் | 100-00 |
| மு விஞயகசேகரம், யாழ்ப்பாணம் | 50-00 |
| எஸ். எம். தவரத்தினம், அராலி | 50 00 |
| ஏ. குணரத்தினம், அராலி | 20-00 |
| ச. அருள்யோகராசா, நெடுந்தீவு | 100-00 |
| சு. மகாலிங்கம், யாழ்ப்பாணம் | 25-00 |
| எஸ். எச். சேதுகாவலர், யாழ்ப்பாணம் | 1'0-00 |
| த. அ. தம்பித்துரை ஊடாக | 75-00 |
| மு. சிற்றம்பலம ஊடாக | 15-00 |
| கொட்டடி மீனுச்சி, முத்தமிழ் சனசமூகநிலையங்கள் | 404-00 |
| கைதடி நுணுவில் சனசமூக நிலையம் | 292-00 |
| கலாசோதி சனசமூக நிலையம், உடுவில் | 220-00 |
| நாவலர் சனசமூக நிலையம், சுதுமலை | 479-90 |
| பாரதி சனசமூக நிலையம், அராலி | 111-00 |
| காந்தி சனசமூக நிலையம், அரியாலை | 191-00 |
| ஸ்ரீதர் தியேட்டர் ஊழியர்கள் | 139-00 |
| நல்லூர் U. F. F. W.ம் | |
| யாழ். சாமுவேல் சன்ஸ் ஊழியர்கள் | 187-00 |
| யாழ். மாநகர மன்ற ஊழியர்கள் | 150-00 |
| தெல்லிப்பழை சுகாதார சேவை ஊழியர்கள் | 440-00 |
| தோப்பு வாலிபர் முன்னேற்றக்கழகம், அச்சுவேலி | 679-00 |
| யாழ் இளைஞர் கழகம், கொக்குவில் | 100-00 |
| கனகரத்தினம் ம. மகாவித்தியாலம், யாழ்ப்பாணம் | 320-00 |
| சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், சுண்டிக்குளி | 300-00 |
| கோப்பாய் தெற்கு சந்தவேள் த. க பாடசாலை | 32-00 |
| அடப்பன் மகாவித்தியாலயம் | 140-00 |
| நெடுந்தீவு மாவிலத்துறை றோ. க. த. க. பாடசாலை | 15-00 |
| தாமரக்கேணி அ. த. க. பாடசாலை | 20-00 |
| மட்டுவில் சாந்தநாயகி த. க. பாடசாலை | 20-00 |
| கரணவாய் தெற்கு விநாயகர் வித்தியாலயம் | 50-00 |
| அளவெட்டி தெற்கு றோ. க. த. க பாடசாலை | 20-00 |
| வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் | 35-00 |
| புதுக்குடியிருப்பு றோ. க வித்தியலயம் | 201-00 |
| சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் ஊடாக | 6713-86 |
| | 1751'4-47 |

## நவரசநாடகம் 200-வது மேடை

யாழ்ப்பாணம், செவ்

''நவரசமன்னன்'' விஜயேந்திரனின் நவரசநாடகம் இருநூறுவது தடவையாக வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை மேடையேற்றப்பட்டது. கலைஞர் சிவசண்முகமூர்த்தி இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தார்.

## சங்கிலி—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாக்க, சிரமதானம் மூலமும் வேறுவழிகளிலும் எடுத்துவரும் நடவடிக்கை பற்றியும் குழுவினருக்கு தெரிவிக்கப்பட்டது.

இக் குழுவினர் அல்லைப்பிட்டியில் சீன மட்பாண்டங்கள் எடுக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர். அவ்விடத்தில் ஆதியிலிருந்த துறையின் இலக்கை தேடிப்பார்ப்பதில் இக் குழுவினர் அதிக கவனம் செலுத்தினர். அடிச்சுவட்டை தேடுவதில் உதவி புரியக்கூடிய வேறு தொல்பொருட்களை தேடுவதில் இப்பகுதியில் தொடர்ந்து முயற்சிஎடுக்கப்படும் எனக் குழுவினர் தெரிவித்தனர்.

அல்லைப்பிட்டியில் கண்டெடுக்கப்பட்டபலவேறு உடையா மட்பாண்டங்கள் தற்போது யாழ். பிரதான வீதியில் உள்ள தொல்பொருள் நிலையத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

## மரண அறிவித்தல்

### கார்த்தியேசு செல்வராசா

மல்லாகம் பங்களா லேனைச் சேர்ந்தவரும், கண்டி வெம்பிளித் தியேட்டரில் கடமையாற்றுபவருமான கார்த்தியேசு - செல்வராசா சிவபதமடைந்துவிட்டார். இவர் இலங்காதேவியின் அன்புக் கணவரும், திருமதி கார்த்தியேசு தங்கம்மாவின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற திருமதி திலகவதி கார்த்தியேச பிள்ளை, திருமதி மகேஸ்வரி வேலாயுதபிள்ளை, ஜெயராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சின்னையா, கார்த்தியேச பிள்ளை (இளைப்பாறிய மத்திய வங்கி உத்தியோகஸ்தர்), மல்லாகம் இந்துக்கல்லூரிகனிஷ்ட அதிபர் வேலாயுதபிள்ளை, மலேசியாவைச் சேர்ந்த சொக்கலிங்கம், காசிநாதன், பரமானந்தன் லண்டனைச் சேர்ந்த திருமதி வைத்தியநாதன் - தவமணி, திருமதி சீதா சுப்பிரமணியம், ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 8-11-77 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் மல்லாகத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். 7617

1978-ம் ஆண்டுக் குரிய ஆராய்ச்சி வேலைகளை மதிப்பிடும் பொருட்டே இக்குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தனர். (க)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெள்ளோவில் மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka